மொட்டு-11 • மலர் 33

# ஐ.வி.டி.பி. மலர்

டிசம்பர் 2018 – மார்ச் 2019
(தனிச்சுற்றுக்கு மட்டும்)

மகளிர் சுய உதவிக்குழு

## புத்துணர்வு இதழ்




**2018இல் இயற்கை எய்திய மற்றும் விபத்தில் நிரந்தர ஊனமுற்ற 719 ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு**

# ₹ 4 கோடி வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி



அன்பு நெஞ்சங்களே,

தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்களும்,
வணக்கங்களும்

# திரும்பி
## பார்க்கிறேன்...!

நாற்பதாம்
ஆண்டில்
ஐ. வி. டி. பி.

நம் ஐ.வி.டி.பி. நிறுவனம் கடந்து வந்த ஆண்டை திரும்பி பார்க்கிறேன். நாம் சந்தித்த எத்தனையோ நிகழ்வுகள், நம் வாழ்வில் பல மாற்றங்களை கொண்டு வந்துள்ளன. குழந்தைகள் திருமணம், கல்வி, புதிய வீடு, வியாபாரம் என பல்வேறு நிகழ்வுகள் நம் குடும்பங்களில் நடந்தேறியுள்ளன. இவையனைத்திலும் ஏதோ ஒரு வடிவில் ஐ.வி.டி.பி. நிறுவனம் உங்களோடு துணை நின்றுள்ளது.

**ஆம் கடந்த ஓர் ஆண்டில் ரூ. 447.54 கோடியை வங்கிக்கடனாகவும், ரூ. 303.5 கோடியை சங்கக் கடனாகவும், ரூ. 22.72 கோடியை ஐ.வி.டி.பி. கடனாகவும் பெற்று நம் வாழ்வாதாரத்தை நாம் உயர்த்தியுள்ளோம். மேலும் கடந்த ஓர் ஆண்டில் புதிதாக 21924 மகளிரை 1218 குழுக்களாக உருவாக்கி ஐ.வி.டி.பி. என்னும் மாபெரும் குடும்பத்தில் இணைத்துள்ளோம்.**

# நிறுவனர் உள்ளத்திலிருந்து...

நம் ஐ.வி.டி.பி. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் எப்போதும் தங்களது உயர்வை மட்டுமே எண்ணாமல், மற்றவர்களுக்கும் உதவும் பொருட்டு **ரூ. 3.7 கோடியை** பல்வேறு சமூக பணிகளுக்கு வழங்கியுள்ளனர். அது மட்டுமல்லாது கடந்த ஆண்டில் நம் அண்டை மாநிலமான **கேரளத்தில் மக்கள் மழை, வெள்ளத்தால் துயருற்ற போது ரூ. 1 கோடி வழங்கியும், நமது தமிழகத்தின் டெல்டா மாவட்ட மக்கள் கஜா புயலினால் பாதிக்கப்பட்ட போது ரூ. 70 இலட்சம் மதிப்பிலான நிவாரண உதவிகளை** அள்ளித்தந்து அவர்களின் துயர் துடைத்தது, நம் உறுப்பினர்களின் கொடை உள்ளத்திற்கு சான்று. நம் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் ஒத்துழைப்பிற்கும் அவர்களின் நல் உள்ளத்திற்கும் என் நன்றியை காணிக்கையாக்குகிறேன்.





இறுதியாக நம் நாட்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் நிறைவுற்று, தேர்தல் முடிவுகளுக்காக காத்திருக்கிறோம். நாட்டு மக்களின் நலனையே குறிக்கோளாகக் கொண்டு மக்களுக்காக பணியாற்றும் அரசு அமையும் என நம்புவோம். அத்தோடு நம் குழந்தைகளின் தேர்வு முடிவுகளும் வெளியாகும் நாட்கள் இவை. எனவே நம் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை தொடர்ந்து வழங்குவோம். அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவோம். வருங்காலத்தை நம்பிக்கையோடு எதிர்நோக்குவோம்.





என்றும் மக்கள் பணியில்...

"ராமன் மகசேசே"

**குழந்தை பிரான்சிஸ்**

நிறுவனர் தலைவர் - ஐ.வி.டி.பி.




ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழுக்களின்
2018ஆம் ஆண்டிற்கான **இலாபப்பங்கீடு**

# ₹ 71 கோடி

இவ்வருடம் 4205 குழுக்களின்
77921 உறுப்பினர்கள் பெற்ற

**உபரி சேமிப்பு**
மற்றும்
**இலாபப் பங்கீடு**
**மொத்தம்**

## ₹ 130 கோடி

உபரி சேமிப்பு ₹ **59** கோடி
இலாபப் பங்கீடு ₹ **71** கோடி

ஐ.வி.டி.பி. நிறுவனத்தின் கீழ் இயங்கும் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் பெண்களை சுயசார்புடையவர்களாக மாற்றி, சமூக, பொருளாதார ரீதியாக அவர்களை முழுமையான வளர்ச்சியடையச் செய்து வருகிறது.

இந்த குழுக்களில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தங்களது குழுவில் குறிப்பிட்ட தொகையினை சேமித்தும், அதற்குத் தக்கவாறு குறைந்த வட்டியில் உள்கடனும் பெற்று பயனடைந்து வருகின்றனர். அவ்வாறு அவர்கள் செலுத்தும் வட்டியானது உறுப்பினர்களின் சேமிப்பிற்கு தக்கவாறு அவர்களுக்குள் இலாபமாக பங்கிடப்படுகிறது. இதுவே இலாபப் பங்கீடு திட்டமாகும்.

இந்த வருடம் ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்தபட்சம் 23% முதல் அதிகபட்சமாக 65% வரை இலாபப்பங்கீடு பெற்று பயனடைந்துள்ளனர்.

**இதுவரை உறுப்பினர்கள் பெற்ற**
**மொத்த இலாபப்பங்கீடு** **₹ 521 கோடி**



**அவை அஞ்சாமை**

வகைஅறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர். - குறள் 721

தூய அறிவாளர்கள், அவையின் தன்மையை அறிந்து அவையில் பேசும் போது, வாய்சோர்ந்து பிழையானவற்றைப் பேசமாட்டார்கள்.

## 2018ம் ஆண்டு இயற்கை எய்திய 719 ஐ.வி.டி.பி. சுயஉதவிக்குழு உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு

# ₹4 கோடி வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி உதவி

ஐ.வி.டி.பி. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான நலத்திட்டங்களில் ஒன்று இயற்கை எய்திய உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி உதவி திட்டமாகும்.

ஒவ்வொரு ஆண்டும் ஐ.வி.டி.பி. மகளிர் சுயஉதவிக் குழுக்களில் இறந்த உறுப்பினர்களை நினைவு கூறும் வகையில் அவர்களின் வாரிசுகளுக்கு வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி வழங்குவதற்காகவும் ஐ.வி.டி.பி.-யில் உள்ள அனைத்து சுய உதவிக்குழு உறுப்பினர்களின் கூட்டு பொறுப்புணர்வை உணர்த்தும் வகையிலும் வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி உதவி திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

17.02.2019 அன்று நடைபெற்ற வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி உதவி திட்ட நிகழ்வில் **கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. S. பிரபாகர், இ.ஆ.ப. அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், பல்லவன் கிராம வங்கியின் பெருந்தலைவர் திரு. தனராஜ் அவர்கள் முன்னிலை வகிக்கவும், "யாவரும் கேளிர்" நிறுவனர் அருட்தந்தை விமல்** அவர்கள் இயற்கை எய்திய உறுப்பினர்களுக்கான இரங்கல் செய்தியுடன் அவர்களின் வாரிசுகளுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் உரை நிகழ்த்தினார். ஐ.வி.டி.பி. நிறுவனத் தலைவர் இத்திட்டத்தின் சிறப்புகளைப் பற்றி எடுத்துரைத்தார்.




இந்த சிறப்பு நிகழ்ச்சியில் 2018ஆம் ஆண்டில் இயற்கை எய்திய **719 உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ. 50,000 மற்றும் விபத்தில் நிரந்தரமாக ஊனமுற்ற 16 உறுப்பினர்களுக்கு தலா ரூ. 25,000 மும் என ரூ. 3.64 கோடி வழங்கப்பட்டது. மேலும் இறந்த உறுப்பினர்களின் ஈமச்சடங்கிற்காக தலா ரூ. 5000 என ரூ. 36 இலட்சம்** வழங்கப்பட்டுள்ளது.

**கடந்த ஆண்டில் அகால மரணமடைந்த திருமதி. ராஜேஸ்வரி, திருமதி. பூங்கொடி என்ற இரண்டு பணியாளர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 3 இலட்சமும் வழங்கப்பட்டது.**

**இந்த வருடம் இவை அனைத்திற்கும் சேர்த்து**
**ரூ. 4 கோடி வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி வழங்கப்பட்டது.**

**இதுவரை இந்த திட்டத்தின் மூலம்**
**இயற்கை எய்திய 5983 உறுப்பினர்களின்**
**வாரிசுகளுக்கு ரூ. 27.33 கோடி**
**வழங்கப்பட்டுள்ளது.**

# 'கஜா புயல்' நிவாரணப் பணியில் ஐ.வி.டி.பி.

## பாதிக்கப்பட்ட டெல்டா மக்களுக்கு ₹ 70 இலட்சம் நிவாரண உதவிகள்

கடந்த 2018 நவம்பர் மாதம் வீசிய கஜா புயலினால் தமிழகத்தின் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் கடுமையான சேதத்தை சந்தித்தன. மக்கள் தங்கள் குடிசை வீடுகள் இழந்தும், விவசாயிகள் தங்கள் தென்னை மரங்கள் போன்ற வாழ்வாதாரங்களை இழந்தும் சந்தித்த பிரச்சினைகள் ஏராளம். கடும் புயலினால் மின்சாரக் கம்பங்கள் அனைத்தும் சாய்ந்த நிலையில் மின்வசதி முற்றிலும் துண்டிக்கப்பட்டு திகைத்து நின்றனர்.

கஜாபுயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க முடிவு செய்து ஐ.வி.டி.பி. தலைவர் விடுத்த வேண்டுகோளை ஏற்று ஐ.வி.டி.பி.-யின் 2 இலட்சத்து 30 ஆயிரம் சுயஉதவிக் குழு உறுப்பினர்களும் புயல் நிவாரணத்திற்காக சுமார் **ரூ. 57 இலட்சத்தை** தங்கள் பங்களிப்பாக வழங்கினர். அத்தொகையோடு ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனம் தனது சொந்த நிதியில் இருந்த வழங்கிய **ரூ. 13 இலட்சத்தையும் சேர்த்து சுமார் ரூ. 70 இலட்சம்** மதிப்பிலான பல்வேறு நிவாரணப் பணிகளை ஐ.வி.டி.பி. நிறுவனம் மேற்கொண்டது.





இடுக்கண் அழியாமை

வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். - குறள் 622

வெள்ளம்போல் துன்பம் பெருகி வருகிறபோது
அறிவுடையவன் அதைப் போக்க நினைக்கும்
அளவிலேயே அத்துன்பம் இல்லாமல் ஓடிவிடும்.

# ‘கஜா புயல்’ நிவாரணப் பணிகள்














**அருள் உடைமை**

அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல். – குறள் 243

எல்லா உயிர்களிடத்திலும் இரக்கம் காட்டுகிற அருள் நிரம்பியர்கள் இருள் சூழ்ந்த கொடிய நரகத்தை அடைய மாட்டார்கள்.

## ‘கஜா புயல்’

கஜா புயலால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர் மாவட்டத்திற்கு **300 நாப்கின் பெட்டிகளும்,** நாகப்பட்டிணம் மாவட்டம், நாகப்பட்டிணம், வேோதரண்யம் பகுதியில் பாதிக்கப்பட்ட **1325 விதவை மகளிருக்கு தார்பாய்கள், கொசுவலை, சோலார் விளக்கு மற்றும் போர்வைகளும்,** புதுக்கோட்டை மாவட்டம் தோப்புக் கொல்லை இலங்கை அகதிகள் முகாமில் வாழும் **526 குடும்பங்களுக்கு சோலார் விளக்குகளும்,** புதுக்கோட்டை மாவட்டம் ரகுநாதபுரம் அக்சீலியம் பெண்கள் கல்லூரியில் பயிலும் **1500 மாணவிகளுக்கு சோலார் விளக்குகளும்** முதற்கட்டமாக வழங்கப்பட்டது.

## கஜா புயல் நிவாரணப் பணிகளில் பிற நிறுவனங்களின் பங்கு

### ‘கஜா புயல்’ நிவாரணப் பணிகளுக்கு பொறியாளர் திரு. அருண் ₹ 5 இலட்சம் உதவி



ஐ.வி.டி.பி.-யின் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான புதிய கட்டிடத்தை கட்டி வருபவர் பொறியாளர் திரு. அருண் அவர்கள். ஐ.வி.டி.பி. நிறுவனர் ‘கஜா புயல்’ நிவாரணப்பணிகளில் ஈடுபடுவதைப் பார்த்து, நெகிழ்ந்து மனமுவந்து கஜா புயல் நிவாரணத்திற்காக **ரூ. 5 இலட்சம்** வழங்கியதுடன் அவருடைய குடும்பத்துடன் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

### வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தூய நெஞ்சக்கல்லூரி மாணவர்களின் பங்களிப்பு ரூ. 5 இலட்சம்

‘கஜா’ புயல் ஏற்பட்டு ஒரு சில நாட்கள் ஆன பிறகே அதன் பாதிப்பு முழுவதும் தெரிய தொடங்கியது. நவம்பர் மாதம் வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் நடைபெற்ற கல்வி உதவித் தொகை வழங்கும் விழாவில் கலந்து கொண்டு பேசிய ஐ.வி.டி.பி. தலைவர், கஜா புயல் பாதித்த பகுதிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்க மாணவர்கள் விரும்பினால் அவர்கள் வசூல் செய்யும் தொகைக்கு நிகரான தொகையை ஐ.வி.டி.பி.-யும் வழங்குவதாக அறிவித்தார்.



அதை ஏற்று அக்கல்லூரி மாணவர்கள் இரண்டே நாட்களில் ரூ. 5 இலட்சம் வசூல் செய்து அதை புதுக்கோட்டை மாவட்டம், தோப்புக்கொல்லை என்ற இடத்தில் வாழும் அகதிகள் முகாமில் உள்ளவர்களுக்கு சோலார் விளக்குகளாக வழங்கலாம் என கூறினர். அதை ஏற்றுக்கொண்ட ஐ.வி.டி.பி. தலைவர் ஐ.வி.டி.பி-யில் இருந்தும் **ரூ. 5 இலட்சம் வழங்கி அந்த முகாமில் வாழும் 526 குடும்பங்களுக்கு தலா ரூ. 2000 மதிப்புள்ள சோலார் விளக்குகள் ரூ. 10 இலட்சம்** மதிப்பில் வழங்கப்பட்டன.



40 IVDP


அழுக்கு ஆறாமை

அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்
பேணாது அழுக்கறுப் பான். - குறள் 163

பிறரது செல்வத்தைக் கண்டு மகிழ்ச்சியடையாமல்
அதற்காகப் பொறாமைப்படுபவன்
அறத்தையும் செல்வத்தையும் இழந்தவனாவான்.











அடுத்த கட்டமாக
புதுக்கோட்டை மாவட்டம்
ரகுநாதபுரத்தை சுற்றியுள்ள
1100 குடும்பங்களுக்கும்,
கீரனூர் பகுதியில் வாழும்
1500 பாதிக்கப்பட்ட
குடும்பங்களுக்கும்
தார்பாய், போர்வை,
சோலார் விளக்குகளும்
வழங்கப்பட்டன.

கடந்த காலங்களில்
ஐ.வி.டி.பி. நிறுவனம் மூலம்
சுனாமி, குஜராத் பூகம்பம்,
தானே புயல்,
வர்தா புயல் மற்றும்
கேரள வெள்ளம் போன்ற
பல்வேறு இயற்கை
சீற்றங்களினால்
பாதிக்கப்பட்ட மக்களுக்கு
**ரூ. 3.7 கோடி**
மதிப்பிலான
**நிவாரண உதவிகள்**
வழங்கப்பட்டுள்ளது.

**கஜா புயல் கண்டெடுத்த கருணை வள்ளல்**
"ராமன் மகசேசே' திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்களுக்கு
அக்ஸீலியம் நிறுவனம் உவந்தளிக்கும்
**வாழ்த்து மடல்**

கருணையே...!
இலட்சங்களுக்காக திரிவோர் மத்தியில்
இலட்சியத்திற்காக ஒளிர்ந்தாய்...!

இயற்கையோடு எம் வாழ்வு
இசைபடவில்லை சிலநாள்...
மழையும் புயலும் எதிரணி ஆகின பலநாள்...
சுற்றிலும் இருட்டென சொல்லி அழுதபோது
சோலார் வெளிச்சம் ஈந்து உள்ளம் உழுதாய்!

வீடிழந்து அநாதையாய் நின்றோம்
ஓடிவந்து சொந்தமானாய்!
பாசனம்அறிந்த யாம் - உம்மில்
கருணையில் சாசனம் பயின்றோம்.
விளைவு...
உம் தார்ப்பாய் எமக்கு தாய்ப்பாசம் ஆனது!!!

குழுவாக நீர்வந்து - கண்ணீர்!
குளமான மக்கள் கண்டீர்!
குறையில்லா பெருந்தொண்டு - இங்கே
குறுகிய சிலநாளில் செய்தீர்!

நிரந்தரம் என ஏதுமில்லை-
வாழ்வில் கடந்துபோகும்
அனைத்தும் என்றீர்! கவலையை
விடுங்கள் என்றே - வாழ்வை
கருத்தாய்த் தொடங்கச் சொன்னீர்!
சரித்தரமாய் உந்தன் வாழ்வு - வாழும்
சந்ததிக்கு ஓர் எடுத்துக்காட்டு!

**நன்றி!**

இவண்
**அக்ஸீலியம் நிறுவனங்கள்**
ரெகுநாதபுரம்
புதுக்கோட்டை மாவட்டம்.

'கஜா புயல்' நிவாரணப் பணிகளை ஐ.வி.டி.பி. புதுக்கோட்டை, நாகப்பட்டினம்,
வேதாரண்யம் போன்றஇடங்களில் மேற்கொள்ள உறுதுணையாக இருந்த
**அக்சீலியம் கல்வி நிறுவனத்திற்கும், கலங்கரை அமைப்பிற்கும்**
மற்றும் **டான்போஸ்கோ குழுமத்திற்கும்**

## ஐ.வி.டி.பி. மனமார்ந்த நன்றிகளை

**உரித்தாக்கி கொள்கிறது.**



ஆகாறு அளவுஇட்டிது ஆயினும் கேடுஇல்லை
போகுஆறு அகலாக் கடை. - குறள் 478

ஒருவனுக்குப் பொருள் வரும் வழியின் அளவு சிறியதாக இருந்தாலும், செலவு பெரிதாகாத போது அதனால் அவனுக்குக் கேடு உண்டாகாது.



## புதுக்கோட்டை மாவட்டம், ரகுநாதபுரத்தில் உள்ள அக்சீலியம் மகளிர் கல்லூரிக்கு
# ₹ 21 இலட்சம் மதிப்பிலான பல்வேறு உதவிகள்

'கஜா' புயலின் தாக்கம் அதிகமாக இருந்த புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஐ.வி.டி.பி. நிவாரணப் பணிகள் மேற்கொள்ள உறுதுணையாக இருந்த அக்சீலியம் மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு ஐ.வி.டி.பி. பல்வேறு நலத்திட்டங்களை இந்த ஆண்டு செயல்படுத்தியது.

| | |
|---|---|
| பெற்றோரை இழந்த 109 மாணவிகளுக்கு வழங்கப்பட்ட **கல்வி உதவித்தொகை** | **₹ 6.25 இலட்சம்** |
| **மாணவிகளுக்கு சோலார் விளக்கு வழங்கியது** | **₹ 9.40 இலட்சம்** |
| கல்வியியல் கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு **Fast track Bag வழங்கியது.** | **₹ 2.40 இலட்சம்** |
| **கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு டின்னர் செட் வழங்கியது.** | **₹ 2.80 இலட்சம்** |





**காலம் அறிதல்**

பகல்வெல்லும் கூகையைக் காக்கை; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. – குறள் 481

காகம் தன்னைக் காட்டிலும் வலிமையுடைய கோட்டானை அதற்குக் கண் தெரியாத பகற்பொழுதில் போரிட்டு வெல்லும். அதுபோலப் பகைவருடன் போரிட்டு வெல்லக் கருதும் அரசர்க்கு ஏற்ற காலம் இன்றியமையாதது.




## “தி இந்து” நாளிதழ் மற்றும் ஐ.வி.டி.பி. இணைந்து

# அரசு பள்ளி நூலகங்களுக்கு ₹ 7.6 இலட்சம் மதிப்பிலான நூல்கள் நன்கொடை

ஐ.வி.டி.பி. நிறுவனத்தின் கல்விப் பணிகளை அறிந்த “தி இந்து” நாளிதழ் குழுமம் கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் உள்ள அரசு பள்ளி நூலகங்களுக்கு புத்தகங்களை வழங்க உள்ளதாகவும், அதன் செலவுத் தொகையில் 40%த்தை “தி இந்து” குழுமமும், 60% தொகையை ஐ.வி.டி.பி. நிறுவனமும் வழங்கினால் அதிக பள்ளிகள் பயனடையும் என்று ஐ.வி.டி.பி. நிறுவனத்தை அணுகி கேட்டனர்.

**அதை ஏற்று ஐ.வி.டி.பி. நிறுவனத்தின் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 50 பள்ளிகளுக்கு ரூ. 2.5 இலட்சம் மதிப்பிலும், தர்மபுரி மாவட்டத்திலுள்ள 104 பள்ளிகளுக்கு ரூ. 5.1 இலட்சம் மதிப்பிலும் என மொத்தம் ரூ. 7.6 இலட்சம் மதிப்பிலான நூலக புத்தகங்கள் வழங்கப்பட்டது.**

கிருஷ்ணகிரியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கிருஷ்ணகிரி **மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. S. பிரபாகர், இ.ஆ.ப. அவர்களும், தர்மபுரியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு தர்மபுரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. H. ரகமதுல்லா கான் அவர்களும் ஐ.வி.டி.பி. நிறுவனர் திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்களுடன்** கலந்து கொண்டு பள்ளித் தலைமை ஆசிரியர்களிடம் புத்தகங்களை வழங்கினர். “தி இந்து” நாளிதழ் குழுமத்திலிருந்து திரு. விஜய், திரு. சதீஸ், திரு. சஞ்சய் ஆகியோர் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**சிந்திப்போம்!**

குயிலைப் பார்த்து
மனிதன் சொன்னான்,
நீ மட்டும் கருப்பா இல்லனா
ரொம்ப நல்லாருக்கும் என்று!!!

கடலைப் பார்த்து கூறினான்
உப்பு மட்டும் இல்லனா
உன் மதிப்பே தனி
என்று!!!

அடுத்து
ரோஜாவைப் பார்த்து
கூறினான் முட்கள் இல்லனா
நீ இன்னும் சிறப்பு என்று!!!

**இவை மூன்று சேர்ந்து மனிதனிடம் சொன்னது குறைகளை மட்டுமே பார்க்கும் குணம் மட்டும் இல்லனா நீ எங்கயோ போயிருப்ப என்று!!!**

**கண்ணோட்டம்**

கண்ணோட்டம் என்னும் கழிபெரும் காரிகை
உண்மையான் உண்டுஇவ் வுலகு. – குறள் 571

கண்ணோட்டம் என்று சொல்லப்படும் மிகச் சிறந்த அழகு இருப்பதனால்தான், இவ்வுலகம் நிலை பெற்றுள்ளது. (கண்ணோட்டம் – தாட்சண்யம், பரிவு நோக்கு)

## சிவகங்கை மாவட்டம், கண்டனூர் சிட்டாள் ஆச்சி நினைவு உயர்நிலைப்பள்ளிக்கு

# ₹ 3.3 இலட்சம் மதிப்பில்

# ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஊக்கப்பரிசுகள்



சிவகங்கை மாவட்டம், கண்டனூரில் சிட்டாள் ஆச்சி நினைவு உயர்நிலைப்பள்ளியானது செயல்பட்டு வருகிறது. அரசு உதவிபெறும் இந்தப் பள்ளி 75 வருடங்களை நிறைவு செய்த நிலையில் இவ்வாண்டு பவளவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. இப்பள்ளியின் **“பவள விழா மலர்”** வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஐ.வி.டி.பி. நிறுவனத்தலைவர் மாணவர்களை ஒற்றுமை உணர்வுடன் வழிநடத்திச் செல்லும் பள்ளி ஆசிரியர்களை பாராட்டி, ஆசிரியர்கள் அனைவருக்கும் **டின்னர் செட்டும், மாணவர்கள் அனைவருக்கும் வாட்டர் பாட்டில்களையும் ரூ. 3.3 இலட்சம் மதிப்பில் பரிசாக வழங்கினார்.**



## முருங்கைப்பூ

40 வயதுக்கு மேற்பட்ட ஒரு சிலருக்கு கண்ணாடி இல்லாமல் எதுவும் படிக்க முடியாது. இதை வெள்ளெழுத்து என்பர். இவர்கள் முருங்கைப் பூவை நிழலில் உலர்த்தி காய வைத்து பொடி செய்து, தேன் கலந்து சாப்பிட்டு வர வெள்ளெழுத்து மாறும், கண்ணில் உண்டாகும் வெண்படலமும் மாறும்.



அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுஉரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று. – குறள் 682

அன்பு, அறிவு, ஆராய்ந்து சொல்கின்ற சொல்வன்மை ஆகிய இவை தூது உரைப்பவர்க்கு இன்றியமையாத மூன்று பண்புகளாம்.

## சேலம் மாவட்டம், ஏற்காடு புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளிக்கு
## ₹ 8 இலட்சம் மதிப்பிலான கணினி ஆய்வகம் நன்கொடை

ஏற்காடு சூசைகிரியில் புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. இந்த பள்ளி மாண்போர்ட் சபையின் உதவியுடன் ஏற்காட்டில் உள்ள ஏழை மாணவர்களுக்கு இலவசமாக கல்விப்பணி ஆற்றி வருகிறது.



இந்த பள்ளியின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட ஐ.வி.டி.பி. தலைவர் அவர்கள், ஏழை மாணவர்களின் நலன் கருதி கணினி ஆய்வகம் வழங்குவதாக ஒப்புக்கொண்டு **ரூ. 8 இலட்சம் மதிப்பில் 25 கணினிகள், புரஜக்டர் மற்றும் ஸ்மார்ட் போர்ட் வசதியுடன் கூடிய கணினி ஆய்வகம்** அமைத்துக் கொடுத்தார்.

## தர்மபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு
## ₹ 1.26 இலட்சம் மதிப்பில் டெஸ்க் மற்றும் பெஞ்ச் நன்கொடை

தர்மபுரி மாவட்டம், தொப்பூரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி இந்த பகுதியை சுற்றியுள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் சிறந்த கல்வியை வழங்கி வருகிறது.




இந்தப்பள்ளி மாணவர்கள் டெஸ்க் மற்றும் பெஞ்ச் பற்றாக்குறையால் தரையில் அமர்ந்து படிக்கும் சூழ்நிலை உள்ளதால் சுமார் 20 டெஸ்க் மற்றும் பெஞ்சை வழங்குமாறு பள்ளித் தலைமையாசிரியர் கேட்டுக்கொண்டார்.

**அவரது வேண்டுகோளை ஏற்று பள்ளிக்கு ரூ. 1.26 இலட்சம் மதிப்பிலான 20 டெஸ்க் மற்றும் பெஞ்சு ஐ.வி.டி.பி. மூலம் வழங்கப்பட்டது.**



**பெரியாரைப் பிழையாமை**

பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும். – குறள் 891

வேந்தன் பெரியோர்களை நன்கு மதிக்காமல் நடந்தால், அது அப்பெரியோரால் நீங்காத துன்பத்தை தருவதாகும்.

## ஏலகிரி, டான்போஸ்கோ கல்லூரி மாணவர்களுக்கு ரூ. 1.2 இலட்சம் மதிப்பில் மதிய உணவுதிட்டம்



வேலூர் மாவட்டம், ஏலகிரி டான்போஸ்கோ கல்லூரியில் பயிலும் மாணவர்கள் பலரும் சுற்றியுள்ள மலைக்கிராமங்களில் இருந்து வருகின்றனர். கல்லூரி படிப்பு எட்டாக் கனியாக உள்ள ஏழை மாணவர்களை அருட்தந்தையர்கள் தேர்வு செய்து அவர்களுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் இந்தக் கல்லூரியில் படிக்க வழிவகை செய்கின்றனர்.

ஆனால் மாணவர்கள் பலரும் குடும்ப சூழ்நிலை காரணமாக மதிய உணவு எடுத்துவருதில்லை என்றும், காலை உணவும் சரியாக உண்பதில்லை எனவும் கல்லூரி நிர்வாகம் தெரிவித்ததை தொடர்ந்து ஐ.வி.டி.பி. மூலம் மதிய உணவிற்கு தேவையான தொகையில் பாதி தொகை வழங்கப்பட்டு கல்லூரியில் மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. **மீதமுள்ள தொகை கல்லூரி நிர்வாகத்தாலும் மாணவர்களாலும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதனால் மாணவர்கள் பசியின்றி கல்வி பயில ஏதுவாகிறது. இவ்வாண்டு இந்த திட்டத்திற்காக ஐ.வி.டி.பி. மூலம் ரூ. 1.2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை இந்த திட்டத்திற்காக ஐ.வி.டி.பி. ரூ. 2.3 இலட்சம் வழங்கியுள்ளது.**

## ஆரணி, புனித ஜோசப் இல்ல மாணவிகளுக்கு உடைகள் எடுத்துச் செல்ல ஏதுவாக ரூ. 1.3 இலட்சம் மதிப்பில் பேக் நன்கொடை



வேலூர் மாவட்டம், ஆரணி புனித ஜோசப் பள்ளியில் பயிலும் ஏழை மாணவிகளுக்காக புனித ஜோசப் மாணவிகள் இல்லம் செயல்பட்டு வருகிறது. இங்குள்ள மாணவிகள் பள்ளி தொடர் விடுமுறை நாட்களில் தங்கள் வீடுகளுக்கு செல்கின்றனர். ஆனால் அவர்களின் உடைமைகளை எடுத்துச் செல்லவும், வீடுகளில் இருந்து எடுத்துவரவும் நல்ல பை இல்லாமல் சிரமப்படுவதாக இல்லத்தை வழிநடத்தும் அருட்சகோதரி. யூஜின் பாத்திமா அவர்கள் கேட்டதையடுத்து **ஐ.வி.டி.பி. நிறுவனம் ரூ. 1.3 இலட்சம் மதிப்பிலான 200 பைகளை நன்கொடையாக வழங்கியது.**



பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். – குறள் 972

மக்களாகப் பிறந்த எல்லோருக்கும் பிறப்பு ஒரு தன்மையதேயாகும். ஆனால் அவ்வுயிர்களின் உயர்வு, தாழ்வு செய்யும் தொழில்களில் உள்ள வேறுபாடுகளைப் பொறுத்தவை.

# அடைக்கலாபுரம் புனித வின்சென்ட் இல்ல மாணவர்களுக்கும், ஆனிமேரி இல்ல மாணவியர்களுக்கும்

## ₹ 12,000 மதிப்பில் ஸ்கார்ப் நன்கொடை



தேன்கனிக்கோட்டை அருகில் உள்ள அடைக்கலாபுரத்தில் "வின்சென்ட் டி பால்" உயர்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளிக்கு அருகில் உள்ள கிராமங்களிலிருந்து ஏழை மாணவ, மாணவியர் கல்வி பயில வருகின்றனர்.

இந்தப்பகுதியில் போக்குவரத்து வசதி குறைவாக உள்ளதால் மாணவ, மாணவிகள் பலரும் இங்கு உள்ள குழந்தைகள் இல்லங்களில் தங்கி கல்வி பயில்கின்றனர். அவர்களுக்கு குளிர்காலத்தில் தலைக்கு அணிந்து கொள்ள ஸ்கார்ப் வேண்டும் என குழந்தைகள் இல்ல நிர்வாகிகள் கேட்டுக் கொண்டதால் **புனித வின்சென்ட் இல்ல மாணவர்களுக்கும், ஆனிமேரி இல்ல மாணவியர்களுக்கும் குளிருக்கு இதமான குல்லா ரூ. 12000 மதிப்பில் ஐ.வி.டி.பி. மூலம் இலவசமாக வழங்கப்பட்டது.**

ஐ.வி.டி.பி. நிறுவனரின் பேத்தி மெர்லின் தர்சனாவின் பிறந்த நாள் அன்று மாணவ-மாணவியருக்கு ஸ்கார்ப் வழங்கப்பட்டு அறுசுவை உணவளித்து கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

**இதற்கு முன்பு இந்த இல்லங்களுக்கு ரூ. 5.2 இலட்சம் மதிப்பில் குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரம்,** LED TV, **குளிப்பதற்கு சோலார் வாட்டர் ஹீட்டர், ஸவெட்டர், வாட்டர் பாட்டில் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.**

## பர்கூர் புனித ஜோசப் சுகாதார மையம் வழியாக குழந்தைகளுக்கு ஸ்கூல் பேக், டிராவல் பேக், வாட்டர் பாட்டில்கள் ரூ. 1.5 இலட்சம் மதிப்பில் நன்கொடை

பர்கூர் அருகில் உள்ள கோட்டூரில் செயல்பட்டு வரும் புனித ஜோசப் சுகாதார மையத்தை வழிநடத்தி வரும் அருட்சகோதரிகளின் வேண்டுகோளுக்கு இணங்கி கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி ஏழை மாணவர்களுக்கு ஸ்கூல் பேக், வாட்டர் பாட்டில்கள் மற்றும் டிராவல் பேக் ஆகியவை **ரூ. 1.5 இலட்சம்** மதிப்பில் வழங்கப்பட்டது.






**கேள்வி**

கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி. – குறள் 418

சான்றோர் கூறும் நூற்பொருளைக் கேட்டலால் நலம் பெறாத காதுகள், கேட்கும் இயல்பினவே ஆனாலும் செவிடான தன்மை உடையனவாகவே மதிக்கப்படும்.

# தருமபுரி அக்சீலியம் பள்ளிக்கு ரூ. 3 இலட்சம் மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள்





தருமபுரி, சோகத்தூர் சாலையில் இயங்கி வரும் அக்சீலியம் மெட்ரிக் பள்ளியில் 1000ற்கும் மேற்பட்ட கிராமப்புற மாணவ-மாணவியர் தரமான கல்வி பயின்று வருகின்றனர். இதுவரை இப்பள்ளியில் சிறுமிகள் விளையாடுவதற்கு போதுமான உபகரணங்கள் இல்லை, மாணவர்கள் விளையாடி மகிழவும், ஆரோக்கியமான உடல் வளர்ச்சி பெறவும், அப்பள்ளி நிர்வாகம் விடுத்த வேண்டுகோளை ஏற்று ஐ.வி.டி.பி. நிறுவனம் **ரூ. 3 இலட்சம் மதிப்பிலான பல்வேறு விளையாட்டு உபகரணங்களை** அப்பள்ளிக்கு வழங்கியது.

## சிவப்பு நிற பழங்களின் நன்மைகள்



- சிவப்பு நிற பழங்கள் இருதய நோய் மற்றும் இரத்தம் கட்டியாதலை தடுக்க உதவுகிறது.
- சிவப்பு நிற பழங்களில் சிறந்த ஆக்சிஜனேற்றி அடங்கியுள்ளதால் புற்றுநோயை தடுக்க உதவுகிறது.
- சிவப்பு நிற பழங்களில் லிகோபீன் என்ற அடர் சிவப்பு நிற கரோட்டீன் இருப்பதால் சிவப்பு நிறங்களில் காணப்படுகின்றன.



**ஊழ்**

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும். - குறள் 373

நுட்பமான பல நூல்களை முயன்று கற்றாலும் ஊழிற்கு ஏற்றவாறு அவனுடைய சொந்த அறிவே மேம்பட்டுத் தோன்றும்.



# ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் அகாடமி பட்டமளிப்பு விழா




அனுமந்தபுரத்தில் அமைந்துள்ள ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் அகாடமி, இந்த ஆண்டு முதல் அகஸ்டினியன் சபை அருட்சகோதரிகளின் மேற்பார்வையில் செயல்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 40 மாணவர்கள் 1 வருட DCA பட்டயக் கல்வி பயின்று பயன் பெற்றனர். அந்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் ஐ.வி.டி.பி. நிறுவனரும், அருட்சகோதரிகளும் கலந்து கொண்டு பட்டயச் சான்றிதழ்களை வழங்கினர்.

## அனுமந்தபுரம் - ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் அகாடமி அருட்சகோதரிகளின் களப்பணிக்கு ஏதுவாக ஐ.வி.டி.பி. மூலம் நான்கு சக்கர வாகனம்

# ரூ. 5 இலட்சம் மதிப்பில் நன்கொடை

அனுமந்தபுரம் ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் அகாடமியை வழிநடத்தி வரும் அருட்சகோதரிகள் களப்பணியை சிறப்புடன் மேற்க்கொள்ள **ஐ.வி.டி.பி. மூலம் ரூ. 5 இலட்சம் மதிப்பில் "மாருதி எக்கோ" நான்கு சக்கர வாகனம் வழங்கப்பட்டது.**





அஞ்சுவதோ ரும் அறனே; ஒருவனை
வஞ்சிப்பதோ ஓரும் அவா. – குறள் 366

ஒருவன் அவாவிற்கு (ஆசைக்கு) அஞ்சி வாழ்வதே அறம். ஏனெனில் ஒருவனைச் சோர்வுகண்டு கெடுத்து வஞ்சிப்பது ஆசையே.



# கோட்டையூர் ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளி மாணவர்களுக்கு ₹ 2.1 இலட்சம் மதிப்பிலான புத்தகப்பைகள் பரிசு

ஐ.வி.டி.பி.-யின் கல்விப் பணிகளுக்கு அடித்தளமானது கோட்டையூரில் அமைந்துள்ள ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளியாகும். 25 ஆண்டுகளாக செயல்படும் இப்பள்ளி தற்போது சென்னை புனித அன்னாள் சபை அருட்சகோதரிகளின் சிறந்த மேற்பார்வையில் செயல்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு தேவையான சீருடைகள், வாட்டர்பாட்டில்கள், சோலார் விளக்கு, புத்தகப்பைகள் போன்றவற்றை ஐ.வி.டி.பி. ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறது.

**அதன் தொடர்ச்சியாக கடந்த 22.12.2018 அன்று பள்ளியில் பயிலும் 480 மாணவர்களுக்கும் ரூ. 2.1 இலட்சம் மதிப்பிலான புத்தகப்பைகள் வழங்கப்பட்டது. இதுவரை இந்தப்பள்ளி மாணவர்களின் நலனுக்காக ஐ.வி.டி.பி. மூலம் ரூ. 24 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.**

## நோயின்றி வாழ பதினெட்டு கட்டளைகள்

- காலையில் ஆசனம், மாலையில் உடற்பயிற்சி இடைப்பட்ட நேரத்தில் தியானம் நாள்தோறும் செய்ய பழக வேண்டும். ஆசனப் பயிற்சி உடலின் உள் உறுப்புகளை நலம் பெறச் செய்யும். உடற்பயிற்சி உடலின் புற உறுப்புகளை வலுபெற செய்யும், தியானம் உள்ளத்தை தூய்மையாகவும், மனதை தெளிவாக்கவும் செய்யும்.
- காலையில் இஞ்சி, நண்பகலில் சுக்கு, மாலையில் கடுக்காய் ஆகியவற்றை சேர்த்து வந்தால், வாதம், பித்தம் ஆகிய நோய்கள் இன்றி வாழலாம்.
- காலையில் சூரிய உதயத்திற்கு முன்பு எழுவதும், இரவில் சீக்கிரம் உறங்குவதும் நோய் தீர்க்கும் அன்றாட நடைமுறைகள் ஆகும்.
- ஒரு நாளைக்கு இருவேளை உணவு உண்டால் போதும். நினைத்த பொழுதெல்லாம் உணவு உண்பதை தவிர்க்க வேண்டும்.
- பசித்து உணவு உண்ணவேண்டும். சாப்பிடும் பொழுது இடை இடையே தண்ணீர் அருந்துவதை தவிர்ப்பதும் நல்லது.
- மலம், ஜலத்தை உரிய நேரத்தில் வெளியிடமால் அடக்கி வைப்பதை தவிர்ப்பது நல்லது.
- புகையிலை சுருட்டு, பொடி, முதலான தீய பழக்க வழக்கங்களை தவிர்ப்பதும் நல்லது.
- வாரம் இரண்டு முறை எண்ணெய் தேய்த்து இள வெந்நீரில் குளிக்க வேண்டும். மாதம் இரு முறை உண்ணா நோன்பு இருத்தல் நல்லது.
- கிடைக்கும் இடங்களில் எல்லாம் பெருந்தாகம் எடுத்தாலும் தண்ணீர் அருந்துவதை தவிர்க்க வேண்டும்.
- அளவுக்கு அதிகமான உப்பு நோயைத் தருவதாகும். உப்பு அது தப்பு என்பது இயற்கை மருத்துவர்களின் அறிவுறுதலாகும்.
- காலையிலும் மாலையிலும் நடைப்பயிற்சி மேற்கொண்டால் மருத்துவமனை நோக்கி நடப்பதை பெரும் அளவில் தவிர்க்கலாம்.
- உணவு வகைகளில் சோற்றைக் குறைவாகும். அதிகமாக கீரைகளையும், காய்கறிகளையும் சேர்த்து கொள்ள வேண்டும்.
- கீழ்க்கண்ட வேண்டாத மன உணர்வுகள் நீக்குவது நல்லது. காமம், பகை, பிறர்க்கு உதவாமை, நான் என்னும் கர்வம், இருமணப் பெண்டிர் மீது பெரு விருப்பு, மனதளவில் விரோதம், பிறரை இகழ்தல், பொறாமை.
- உணவுக்கு பின் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு சேர்த்து கொள்வது நல்லது வெற்றிலை உணவை விரைவாக செரிக்க செய்யும், பாக்கு நுரையீரலில் ஏற்படும் சளிதொல்லையை தீர்க்கும், சுண்ணாம்பு எலும்புகளுக்கு வலிமை சேர்த்து குடல் நோய்களை குணப்படுத்தும்.
- அதிக அளவு நீர், கீரை வகை உணவுகளும், பழவகைகளும் மலச்சிக்கலை நீக்கும்.
- நாட்பட்ட உணவை உண்ணக்கூடாது.
- நண்பகலில் தூக்கம், இரவில் விழித்து இருத்தல் நோயை விருந்து வைத்து அழைப்பதாகும்.
- தினமும் காலையில் குளிர்ந்த நீரில் குளிப்பது சிறந்தது.



நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற? – குறள் 304

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும்
கொல்கின்ற சினத்தைக் காட்டிலும்
வேறு பகை இல்லை!



## பெற்றோர்களை இழந்த 623 கல்லூரி மாணவர்களுக்கு
## ரூ. 34.25 இலட்சம் ஐ.வி.டி.பி. கல்வி உதவித்தொகை

பெற்றோரை இழந்த கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பெற்றோர் இருவரையும் இழந்த மாணவர்களுக்கு தலா ரூ. 10,000 மும் பெற்றோரில் ஒருவரை இழந்த மாணவர்களுக்கு தலா ரூ. 5,000 மும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் பெற்றோரை இழந்த 623 மாணவர்களுக்கு ரூ. 34.25 இலட்சம் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- வேலூர் அக்சீலியம் கல்லூரியில் பயிலும்
  **175 மாணவிகளுக்கு ரூ. 9.4 இலட்சம்**
- தர்மபுரி தொன் போஸ்கோ கலைக்கல்லூரியில் பயிலும்
  **83 மாணவர்களுக்கு ரூ. 4.3 இலட்சம்**
- தர்மபுரி தொன் போஸ்கோ கல்வியியல் கல்லூரியில் பயிலும்
  **12 மாணவிகளுக்கு ரூ. 1.2 இலட்சம்**
- ஏலகிரி தொன் போஸ்கோ கல்லூரியில் பயிலும்
  **94 மாணவர்களுக்கு ரூ. 5.35 இலட்சம்**
- புதுக்கோட்டை, ரகுநாதபுரம் அக்சீலியம் கல்லூரியில் பயிலும்
  **109 மாணவிகளுக்கு ரூ. 6.25 இலட்சம்**

முதல் வருடம் இந்த கல்வி உதவித் தொகையைப் பெற்ற மாணவர்கள் அடுத்தடுத்த ஆண்டுகளில் கல்வி உதவித் தொகை பெற வேண்டுமானால் பருவத் தேர்வுகளில் தோல்வியுறாமல் இருப்பது கட்டாயம்.

## இதுவரை இந்த திட்டத்தின்கீழ் ரூ. 1.02 கோடி செலவிடப்பட்டுள்ளது.





**புகழ்**

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்.
– குறள் 232

இவ்வுலகில் பேசுவோர் சிறப்பாகப் பேசுவன எல்லாம் தம்மிடம் வந்து யாசிப்பவர்க்கு அவர் வேண்டும் ஒரு பொருளைக் கொடுத்து உதவுவோரிடம் நிற்பதாகிய புகழையேயாகும்.




# கல்லூரி மாணவர்களின் பங்களிப்புடன் கூடிய ஏழை மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம்

கல்லூரி மாணவர்களை சமூகப்பணிகளில் ஈடுபடுத்தி, சேவை மனப்பான்மையை வளர்க்கும் நோக்கத்தோடு, பெற்றோர் இருந்தும் ஏழ்மை நிலையில் படிக்கும் மாணவர்களின் நலனுக்காக உடன் பயிலும் மாணவர்களின் பங்களிப்புடன் கூடிய ஏழை மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம் – திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் கடந்த இரண்டு வருடங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி, கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களும் தங்களால் இயன்ற தொகையினை ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வழங்கினால், அவர்கள் வழங்கும் தொகைக்கு நிகரான தொகை ஐ.வி.டி.பி. மூலம் வழங்கி மாணவர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஏழை மாணவர்களின் நலனுக்காக அந்தத்தொகையை பிரித்து கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

**இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு**
**80 மாணவர்களுக்கு தலா ரூ. 5000 என ரூ. 2 லட்சம்**
**ஐ.வி.டி.பி. நிறுவனத்தில் இருந்தும்,**
**ரூ. 2 இலட்சம் தூய நெஞ்சக் கல்லூரி மாணவர்களின் பங்களிப்பிலிருந்தும்,**
**உதவித்தொகையாக வழங்கப்பட்டது. கடந்த 2 வருடங்களில்**
**ரூ. 7.4 இலட்சம் 164 மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.**



# கிருஷ்ணகிரி புனித அன்னாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு ரூ. 3.36 இலட்சம் மதிப்பிலான உதவிகள்

கிருஷ்ணகிரி புனித அன்னாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் இணையதளம் வழியாக கல்வி பயில ஏதுவாக **7 ஸ்மார்ட் LED டிவி, தேவைப்பட்ட நிலையில் பள்ளி நிர்வாகம் 4 ஸ்மார்ட் LED டிவி-களையும் ஐ.வி.டி.பி. நிறுவனம் ரூ. 1.11 இலட்சம் மதிப்பிலான 3 ஸ்மார்ட் LED டிவி-க்களையும்** வழங்கியது. அந்த டிவிக்களை ஐ.வி.டி.பி. தலைவர் இராமன் மகசேசே குழந்தை பிரான்சிஸ் அவர்கள் பள்ளியின் தலைமையாசிரியை அருட்சகோதரி. ஹெலன் அவர்களிடம் வழங்கினார். மேலும் இப்பள்ளியில் பணியாற்றி ஓய்வு பெற்ற தலைமையாசிரியை அருட்சகோதரி. அல்போன்சா செலின் அவர்களின் பணி நிறைவு விழாவில் அவருக்கு அளிக்கப்பட்ட **ரூ. 75 ஆயிரம் அன்பளிப்பு தொகையை அந்த பள்ளியில் பணியாற்றும் கடைநிலை ஊழியர்கள் 3 பேருக்கு தலா ரூ. 25000** அளிப்பதாக அருட்சகோதரி அல்போன்சா செலின் உறுதி அளித்தார்.

தனக்கு கிடைத்த தொகையை பிறருக்கு அளிக்க வேண்டும் என்ற அருட்சகோதரியின் சேவை மனப்பான்மையை பாராட்டி அதை ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு ஐ.வி.டி.பி. நிறுவனத்தலைவர் **ரூ. 25000த்துடன் ரூ. 75000த்தைச் சேர்த்து தலா ரூ. 1 இலட்சம் என மூன்று பேருக்கும் ரூ. 3 இலட்சம் வழங்கினார். அந்த தொகையை வங்கியில் 10 வருடங்களுக்கு நிலைவைப்பு செய்து 10 வருடங்கள் கழித்து ஒவ்வொருக்கும் தலா ரூ. 2 இலட்சம்** கிடைக்கும் வகையில் வழங்கினார்.




இதுவரை புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளி குழந்தைகளின் நலனுக்காக **ரூ. 33.5 இலட்சம் மதிப்பிலான கணினி ஆய்வகம், குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரம், ஜெனரேட்டர், இரும்பு தடுப்பு வலை, ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஊக்கப்பரிசுகள், மாணவர்களுக்கு ஊக்கப்பயிற்சி, விளையாட்டு உடைகள்** என ஐ.வி.டி.பி. மூலம் பல்வேறு கல்வி வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி! – குறள் 1118

சந்திரனே! இம்மாதரின் முகம் போல ஒளிவீச உன்னால் முடியுமானால் நீயும் என் அன்பிற்குப் பாத்திரமாவாய். நீ வாழ்வாயாக.




# வேலூர், புனித மரியன்னை பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ. 2.8 இலட்சம் மதிப்பிலான பரிசுப்பொருள்கள் மாணவிகளுக்கு ரூ. 1.45 இலட்சம் மதிப்பிலான குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரம் வழங்கல்

வேலூர் மாவட்டம், வேலூர் நகரில் அமைந்துள்ள புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி 90 ஆண்டுகள் பழமை வாய்ந்த பள்ளியாகும். இந்த பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களின் வழிகாட்டுதலில் மாணவர்கள் கல்வியிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்குகின்றனர்.

**ஆசிரியர்களின் சேவை மனப்பான்மையை பாராட்டி அங்கு பணிபுரியும் 70 ஆசிரியர்களுக்கும் ரூ. 2.8 இலட்சம் மதிப்பிலான டின்னர் செட்** பரிசாக வழங்கப்பட்டது.

மேலும் அங்கு குழந்தைகள் இல்லத்திலுள்ள ஏழை மாணவிகளின் நலன் கருதி **ரூ. 1.45 இலட்சம்** மதிப்பிலான குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரத்தையும் ஐ.வி.டி.பி. நிறுவனத்தலைவர் வழங்கினார்.




இதற்கு முன்னர் இந்தப்பள்ளியில் பயிலும் **2500 மாணவிகளுக்கும் ரூ. 4.4 இலட்சம் மதிப்பில் வாட்டர் பாட்டில்கள் ஐ.வி.டி.பி. மூலம் வழங்கப்பட்டது. இதுவரை இந்த பள்ளிக்கு ஐ.வி.டி.பி. ரூ. 8.65 இலட்சம் மதிப்பிலான உதவிகளை** வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.







## பர்கூர் ஐ.இ.எல்.சி. பார்வையற்றோர் பள்ளி மாணவர்கள்

# கல்விச் சுற்றுலா செல்ல ஐ.வி.டி.பி. ரூ. 53 ஆயிரம் உதவி

பர்கூரில் செயல்பட்டு வரும் ஐ.இ.எல்.சி. பார்வையற்றோர் பள்ளியில் பயிலும் மாணவர்கள் கல்விச் சுற்றுலாச் செல்ல பேருந்து வசதி ஏற்படுத்தித் தருமாறு பள்ளி ஆசிரியர்கள் ஐ.வி.டி.பி. நிறுவனத்தை அணுகினர். பார்வையற்ற மாணவர்கள் செல்லும் இந்த சுற்றுலா அவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் என்பதால் ஐ.வி.டி.பி. மூலம் பேருந்து வசதி **ரூ. 53 ஆயிரம்** செலவில் செய்து தரப்பட்டது.

## மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு

# ஐ.வி.டி.பி. மூலம் ரூ. 60 ஆயிரம் மதிப்பில் உணவு வழங்கல்



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா அரசு சார்பில் நடைபெற்றது. அதில் கலந்து கொள்ள வந்த மாற்றுத்திறனாளிகளுக்கு உணவு வழங்குமாறு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை கேட்டுக் கொண்டதால் 1000 பேருக்கு உணவு மற்றும் குடிநீர் பாட்டில்கள் **ரூ. 60 ஆயிரம்** மதிப்பில் ஐ.வி.டி.பி. மூலம் வழங்கப்பட்டன.



கொடுங்கோன்மை

நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொழும் நாடு கெடும். – குறள் 553

நாட்டில் நாள்தோறும் நடைபெறும் நன்மை தீமைகளை ஆராய்ந்து, ஆட்சி செய்யாத அரசன் நாளுக்கு நாள் தன் நாட்டை இழந்து வருவான்.




# அத்திமுகம் உண்டு உறைவிடப்பள்ளி மாணவர்களின் நலனுக்காக ₹ 1.4 இலட்சம் மதிப்பில் கிரைண்டர் மற்றும் பரிசுகள்

அத்திமுகத்தில் செயல்பட்டு வரும் ARS உண்டு உறைவிடப்பள்ளியானது நாடோடி இன மக்களின் குழந்தைகளுக்காக செயல்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு காலை மற்றும் இரவு சிற்றுண்டி தயாரிக்க மாவு அரைப்பதற்கு தேவையான நவீன இயந்திரம் வேண்டும் என இல்லத்தை வழிநடத்தும் அருட்சகோதரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க **ரூ. 81 ஆயிரம்** மதிப்பில் இரண்டு மாவு அரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டது.

மேலும் இந்த மாணவர்களை அர்ப்பணிப்பு உணர்வுடன் வழிநடத்தும் ஆசிரியர்களை பாராட்டும் விதமாக இங்கு பணிபுரியும் 15 ஆசிரியர்களுக்கு தலா ரூ.4000 மதிப்பிலான டின்னர் செட் பரிசாக வழங்கப்பட்டது. இவை அனைத்தின் மொத்த மதிப்பு **ரூ. 1.4 இலட்சம்** ஆகும்.



**இச்சகோதரிகள் ஆற்றிவரும் குழந்தைகள் நேயப்பணிகளுக்காக ஐ.வி.டி.பி. நிறுவனம் மூலம் இதுவரை ரூ. 8.6 இலட்சம் மதிப்பில் பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.**







# கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக் கல்லூரிக்கு ரூ. 17.2 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்டங்கள்

**₹ 5.25 இலட்சம் மதிப்பிலான "ஐ.வி.டி.பி. வள்ளுவர் விருது" மற்றும் பல்வேறு வகையான திறன் வளர்ப்பு பயிற்சிகளும், பரிசுகளும்**

கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் கின்னஸ் சாதனை முயற்சியாக **திருக்குறளின் 1330 குறட்பாக்களுக்கும் கருத்து விளக்க ஓவியங்கள் வரைந்து புத்தகமாக** வெளியிடப்பட்டது. இப்பணியினை அக்கல்லூரியின் தமிழ்த்துறை பேராசிரியர்கள் முனைவர். திருமதி. கீதா, முனைவர் திருமதி. சிவகாமி ஆகியோர் தொகுத்து புத்தகம் வெளியிட பெரிதும் பங்காற்றினர். கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட ஐ.வி.டி.பி. தலைவர் இராமன் மகசேசே குழந்தை பிரான்சிஸ் அவர்கள் திருக்குறள் கருத்து விளக்க ஓவியங்கள் வரைந்து கின்னஸ் முயற்சியில் ஈடுபட்ட அனைத்து மாணவியர் மற்றும் வழிகாட்டி ஆசிரியர்களை பாராட்டி ஐ.வி.டி.பி. நிறுவனம் சார்பில் வள்ளுவர் விருது வழங்குவதாக அறிவித்தார்.

**அதன்படி கடந்த 26.03.2019 அன்று கல்லூரியில் நடைபெற்ற விழாவில் திருக்குறள் கருத்து விளக்க ஓவியம் வரைந்த மாணவிகள் மற்றும் வழிகாட்டி ஆசிரியர்கள், ஓவியர் என 153 பேருக்கு ரூ. 5.25 இலட்சம் மதிப்பிலான ஐ.வி.டி.பி. வள்ளுவர் விருதுக்கான தங்கப் பதக்கங்களை ஐ.வி.டி.பி. நிறுவன தலைவர் திரு. குழந்தை பிரான்சிஸ் வழங்கி கௌரவித்தார்.**

அதுமட்டுமல்லாது... சென்ற ஆண்டில் மாணவிகளுக்கு பல்வேறு வகையில் திறன் வளர்ப்புப் பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டது. பயிற்சி கட்டணத்தில் பாதியை மாணவியரும், மீதமுள்ள தொகையை ஐ.வி.டி.பி. நிறுவனமும் வழங்க முடிவு செய்யப்பட்டது. அதன் படி இந்த ஆண்டில்

- இரண்டாம் கட்ட தையல்பயிற்சி, அழகுக்கலை பயிற்சி, கம்ப்யூட்டர் Tally பயிற்சி போன்றவற்றுடன் புகைப்படக் கலை பயிற்சி ஆகியவற்றிற்காக மாணவிகள் வழங்கிய தொகைக்கு நிகராக **ரூ. 3 இலட்சம்** ஐ.வி.டி.பி. வழங்கியது.
- தையல் பயிற்சியில் சிறந்து விளங்கிய **10 மாணவிகளுக்கு தையல் இயந்திரம் தலா. ரூ. 5,320 என ரூ. 53,200** மதிப்பில் பரிசாக வழங்கப்பட்டது.
- கம்ப்யூட்டர் Tally பயிற்சியில் சிறந்து விளங்கிய **10 மாணவிகளுக்கு தலா ரூ. 3150 மதிப்பிலான 1 கிராம் தங்க நாணயம் ரூ.31,500** மதிப்பில் பரிசாக வழங்கப்பட்டது.
- புகைப்படக் கலை பயிற்சியில் சிறந்து விளங்கிய **1 மாணவிக்கு ரூ. 30,000 மதிப்பிலான** Nikon **கேமரா பரிசாக** வழங்கப்பட்டது.
- 2016-2019ஆம் கல்வியாண்டில் பயிலும் 750 மாணவிகளில் 256 மாணவிகள் தங்கள் 5 ஆம் பருவத்தேர்வில் முழுத்தேர்ச்சி அடைந்ததை பாராட்டி அவர்களுக்கு **தலா ரூ. 500 என ரூ. 1.28 இலட்சம்** ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.
- இந்த கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர்களை பாராட்டி **108 டின்னர் செட் ரூ. 4.32 இலட்சம்** மதிப்பில் பரிசாக வழங்கப்பட்டது.







**2018-2019ஆம் ஆண்டு இந்தக் கல்லூரியில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களுக்காக ரூ. 23.7 இலட்சம் ஐ.வி.டி.பி. வழங்கியுள்ளது. இதுவரை இக்கல்லூரிக்கு ஐ.வி.டி.பி. நிறுவனம் மூலம் ரூ. 60 இலட்சம் மதிப்பில் பல்வேறு கல்விப்பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.**



## ஓசூர் ஜான்போஸ்கோ பள்ளி மாணவிகளின் விளையாட்டு திறனை ஊக்கப்படுத்தி

# ரூ. 50 ஆயிரம் மதிப்பில் TITAN வாட்ச் பரிசு

ஓசூர் ஜான்போஸ்கோ பள்ளி மாணவிகள் இந்த ஆண்டு நடைபெற்ற மாநில அளவிலான **Fencing, Valley Ball, Coco** போன்ற போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி வாகை சூடினர். அவர்களின் விளையாட்டு திறனை பாராட்டும் வகையில், ஐ.வி.டி.பி. நிறுவனம் **ரூ. 50 ஆயிரம்** மதிப்பில் விளையாட்டில் வெற்றி பெற்ற 40 மாணவிகளுக்கும், பயிற்சி ஆசிரியர்களுக்கும் **TITAN** வாட்ச் பரிசாக வழங்கப்பட்டது.

## செஸ் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு

# ஐ.வி.டி.பி.-யின் தங்க பதக்கம்



கிருஷ்ணகிரியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான செஸ் போட்டியில் கலந்து கொண்டு முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கு ஐ.வி.டி.பி. மூலம் தலா **ரூ. 3100 மதிப்புள்ள 1 கிராம் தங்க நாணயம் 3 மாணவர்களுக்கு** வழங்கப்பட்டது.



**கேள்வி**

செவியின் சுவைஉணரா வாய்உணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என். – குறள் 420

காதுகளால் கேட்டறியும் சுவைகளைக் கேட்டு உணர்ந்து கொள்ளாமல், வாயால் சுவைத்து உண்ணப்படும் சுவைகளையே அறிந்த மக்கள் இறந்தாலும் வாழ்ந்தாலும் உலகிற்கு நன்மை ஒன்றும் இல்லை.




## அன்னியாளம் ஆனந்த நகரிலுள்ள ஜான்பிரிட்டோ பள்ளிக்கு ஐ.வி.டி.பி. ரூ. 2.52 லட்சம் மதிப்பிலான FLOOR TILES வழங்கியது.

அன்னியாளம், ஆனந்த நகரில் உள்ள ஜான்பிரிட்டோ பள்ளிக்கு திறந்தவெளி கலையரங்கம் அமைக்க தேவையான கட்டுமானப் பணிகளுக்காக சென்ற ஆண்டு ஐ.வி.டி.பி. **ரூ. 4.66 இலட்சம்** வழங்கியது. அதைத் தொடர்ந்து திறந்தவெளி கலையரங்கத்தில் தரையை செம்மையாக்க இந்த ஆண்டு **ரூ. 2.52 இலட்சம்** மதிப்பில் **FLOOR TILES** வழங்கியது.



# ஏழை குடும்பத்திற்கு வீடுகட்ட ₹ 1 இலட்சம் உதவி



சேலம் மாவட்டம், வாழப்பாடியில் உள்ள ஒரு குடும்பத்தில் 11 குழந்தைகள் இருப்பதாகவும், பெற்றோர் இருவருமே கூலி வேலை செய்து வருவதால், அன்றாடம் குடும்பம் நடத்த மிகவும் சிரமப்படுகின்றனர் என்றும் வாழப்பாடியில் உள்ள R.C. சர்ச்சின் பங்குத் தந்தை ஜெ. விமல் அவர்கள், ஐ.வி.டி.பி. தலைவரிடம் தெரிவித்தார். மேலும் அவர்கள் வீடு எதுவும் இல்லாமல், புறம்போக்கு நிலத்தில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள வீட்டில் வசித்து வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

**இன்றைய நவீன காலத்திலும் ஒரு குடும்பத்தில் 11 குழந்தைகள் இருப்பதை கேள்விப்பட்ட ஐ.வி.டி.பி. தலைவர் அந்த குடும்பத்தில் உள்ள பெண் குழந்தைகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு தேவையான நிலம் வாங்க ரூ. 1 இலட்சம் நிதி உதவி அளித்தார்.**

# திருச்சி - ஹோலிகிராஸ் கல்லூரியின் மகளிர் தினவிழா







திருச்சி – ஹோலிகிராஸ் கல்லூரியில் மகளிர் தினவிழா 08.03.2019 அன்று கொண்டாடப்பட்டது. நம் ஐ.வி.டி.பி. தலைவர் “இராமன் மகசேசே” குழந்தை பிரான்சிஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். எண்ணற்ற மகளிர் சுயஉதவிக் குழுக்களின் மூலம், ஏழை மகளிர் வாழ்வில் ஒளியேற்றும் அவரை கௌரப்படுத்தி "The Man of Charity" என்ற பொருள் பொதிந்த நினைவு பரிசு வழங்கப்பட்டது.

**The Man of CHARITY**



பொச்சாவாமை

உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின். – குறள் 540

ஒருவன் எண்ணியதை விடாமல் எண்ணி சோர்வில்லாமல் இருக்கப் பெற்றால், அவன் நினைத்ததை அடைதல் எளிதாகும்.

# பரோட்டா பிரியர்களுக்கு ஓர் எச்சரிக்கை

## தினமும் இரவு பரோட்டா சாப்பிட்டால் தான் சாப்பிட்ட திருப்தி கிடைக்கிறதா?



இன்று தமிழகம் முழுவதும் பரவலாக காணப்படுகிறது பரோட்டா கடை. அந்த பரோட்டாவும் ஊருக்கு ஊர் எத்தனை வகை? அளவிலும் சுவையிலும் எத்தனை வேறுபாடு? விருதுநகர் பரோட்டா, தூத்துக்குடி பரோட்டா, கொத்து பரோட்டா, சில்லி பரோட்டா, சொல்லும்போதே நாவில் நீர் ஊருமே.

## பரோட்டாவின் கதை என்ன தெரியுமா?

பரோட்டா என்பது மைதாவால் செய்யப்படும் உணவாகும். இது தமிழகம் எங்கும் கிடைக்கிறது. இரண்டாம் உலகப் போரின்போது ஏற்பட்ட கோதுமைப் பற்றாக்குறையால், மைதா மாவினால் செய்யப்பட்ட உணவுகள் தமிழகத்தில் பரவலாகப் பயன்படத் தொடங்கின, பரோட்டாவும் பிரபலமடைந்தது.

பரோட்டா பொதுவாக எப்படி செய்வார்கள்? மைதா மாவுல உப்பு போட்டு, தண்ணி விட்டு பிசைஞ்சு, அப்புறம் எண்ணெய் விட்டு, உருட்டி, ஒவ்வொரு உருண்டையையும் தட்டி, அடித்து, பெரிய கைக்குட்டை போல் பறக்க விட்டு, அதை அப்படியே சுருட்டி, திரும்ப வட்ட வடிவில் உருட்டி, தோசைக்கல்லில் போடுவார்கள்.

## இப்போது பரோட்டாவின் மூலபொருளான மைதாவில் தான் பிரச்சனை துவங்குகிறது.

பரோட்டா மட்டுமல்லாது இன்னும் பல உணவு வகைகள் இந்த கொடிய மைதாவில் இருந்து தயாரிக்கப்படுகிறது. நாம் பிறந்த நாள் கொண்டாட வாங்கும் கேக் உட்பட!



## மைதா எப்படி தயாரிக்கிறார்கள்?

நன்றாக அரைக்கப்பட்ட கோதுமை மாவு மஞ்சள் நிறத்தில் இருக்கும் அதை பென்சாயல் பெரோசிடே (BENZOYL PEROXIDE) என்னும் ரசாயனம் கொண்டு வெண்மையாக்குகிறார்கள். அதுவே மைதா.

BENZOYL PEROXIDE நாம் முடியில் அடிக்கும் டை-யில் உள்ள ரசாயனம் இந்த ராசாயனம் மாவில் உள்ள PROTEIN உடன் சேர்ந்து நீரிழிவுக்கு நோய்க்கு காரணியாய் அமைகிறது.

இது தவிர ALLOXAN என்னும் ராசாயனம் மாவை மிருதுவாக்க கலக்கப்படுகிறது. மேலும் ARTIFICIAL COLORS, MINERAL OILS, TASTE MAKERS, PRESERVATIVES, SUGAR, SACCARINE, AJINOMOTTO போன்ற உப பொருட்களும் சேர்க்கப்படுகிறது. இது மைதாவை இன்னும் அபாயகரமாக்குகிறது.

இதில் ALLOXAN சோதனை கூடத்தில் எலிகளுக்கு நீரிழிவு நோய் வரவைப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. ஆக பரோட்டாவில் உள்ள ALLOXAN மனிதனுக்கு நீரிழிவு நோய் வர காரணமாகிறது.

## ஐ.வி.டி.பி. தலைவர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள்




▶ தருமபுரி அக்சீலியம் பள்ளி ஆண்டு விழா



▶ ஒன்னல்வாடி புனித அகஸ்டினியன் பள்ளி ஆண்டு விழா



▶ நாட்றாம்பாளையம் பல்லவன் கிராம வங்கியின் புதிய கிளை துவக்க விழா

## ஐ.வி.டி.பி. நிறுவனத்திற்கு வருகை தந்த விருந்தினர்



▶ **LG** மேலாண்மை இயக்குநர் திரு. இராமசந்திரன், கோவை மண்டல மேலாளர் திரு. பிரசாந்த் ஆகியோர் ஐ.வி.டி.பி.-க்கு வருகை புரிந்தனர்.

# ஐ.வி.டி.பி.-யில் நடைபெற்ற விழாக்கள்




● ஐ.வி.டி.பி. பணியாளர் தின விழா



● ஐ.வி.டி.பி. தலைவர் பேத்தி மெர்லின் தர்ஷனா பிறந்த நாள் விழா





● ஐ.வி.டி.பி. நிறுவனத்தில் 26 ஆண்டுகள் பணிபுரிந்த ஓட்டுநர் திரு. எலியாஸ் அவர்கள் பணிநிறைவு விழா



● தீபாவளி திருநாள் பரிசுகள்




● கிறிஸ்து பிறப்பு விழா



● விநாயகர் சதுர்த்தி விழா



● பொங்கல் விழா

# சிங்கப்பூர் - மலேசியா சுற்றுலா

ஐ.வி.டி.பி. பணியாளர்களில் அதிக ஆண்டுகளும் சிறப்புடனும் பணியாற்றிய 15 பணியாளர்களை
தேர்வு செய்து 6 நாட்கள் மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்கு இன்பச் சுற்றுலா அழைத்து செல்லப்பட்டது.














# சிங்கப்பூர் - மலேசியா சுற்றுலா















## ஏப்ரல் 2018ல் இருந்து மார்ச் 2019 வரையிலான ஐ.வி.டி.பி. குழுக்களின் விபரம்

ஐ.வி.டி.பி. செயல்படும் மாவட்டங்கள் : கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் வேலூர்.
ஐ.வி.டி.பி. கிளை அலுவலகங்கள் : 71

| விவரம் | மார்ச் 2018 வரை | ஏப்ரல் 2018 – மார்ச் 2019 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி.–யில் உள்ள மொத்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் | 12134 | 1218 | 13352 |
| மொத்த சுய உதவிக்குழு உறுப்பினர்கள் | 219168 | 21924 | 241092 |
| ஐ.வி.டி.பி. குழுக்களின் மொத்த சேமிப்பு | ₹ 556 கோடி | ₹ 96.5 கோடி | ₹ 652.5 கோடி |
| ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் பெற்ற இலாபப்பங்கீடு | ₹ 450 கோடி | ₹ 71 கோடி | ₹ 521 கோடி |

## கடன் விவரம்

| விவரம் | மார்ச் 2018 வரை | ஏப்ரல் 2018 – மார்ச் 2019 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற மொத்த வங்கிக் கடன் தொகை | ₹ 2898.22 கோடி | ₹ 447.54 கோடி | ₹ 3345.76 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் உள்கடனாக பெற்ற சங்க கடன் தொகை | ₹ 2782.00 கோடி | ₹ 317.50 கோடி | ₹ 3100.00 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற ஐ.வி.டி.பி. கடன் தொகை | ₹ 133.50 கோடி | ₹ 22.72 கோடி | ₹ 156.22 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் சுகாதாரத்திட்டங்களுக்காக செலவிட்ட தொகை | ₹ 152.50 கோடி | ₹ 18.00 கோடி | ₹ 170.50 கோடி |
| மொத்த கடன் சுழற்சி | ₹ 5965.82 கோடி | ₹ 805.76 கோடி | ₹ 6772.50 கோடி |

## மனித நேயப் பணிகளில் ஐ.வி.டி.பி.

மனிதன் மனித நேயத்துடன் இருப்பதை விட மகத்தான காரியம் வேறு எதுவும் இல்லை

(ஐ.வி.டி.பி. நேரடியாகவும் குழுக்களின் பங்களிப்பாகவும் வழங்கிய தொகை)

| விவரம் | மார்ச் 2018 வரை | ஏப்ரல் 2018 – மார்ச் 2019 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| உறுப்பினர்களின் வாரிசுகள் பெற்ற வாழ்க்கை பாதுகாப்பு நிதி | ₹ 23.33 கோடி | ₹ 4 கோடி | ₹ 27.33 கோடி |
| கார்கில் போர், குஜராத் பூகம்பம், சுனாமி, தானே புயல், வர்தா புயல், கேரள வெள்ள நிவாரணம், கஜா புயல் போன்ற பணிகளுக்காக ஐ.வி.டி.பி. குழுக்கள் வழங்கிய தொகை | ₹ 2.00 கோடி | ₹ 1.7 கோடி | ₹ 3.7 கோடி |
| உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட குடிசை தீ விபத்து நிதி, ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், அன்னையர் தினம் | ₹ 37.35 இலட்சம் | ₹ 5.1 இலட்சம் | ₹ 42.45 இலட்சம் |
| மருத்துவமனை, சிறைகள், முதியோர் இல்லம், Women Empowerment Award, ஏழைகளுக்கு வீடு கட்டும் திட்டம், கடைநிலை பணியாளர்களுக்கு நிலைவைப்பு ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டது | ₹ 1.38 கோடி | ₹ 13.75 இலட்சம் | ₹ 1.52 கோடி |
| கல்வி பணிகளுக்காக வழங்கிய தொகை | ₹ 22.53 கோடி | ₹ 2.26 கோடி | ₹ 24.79 கோடி |
| ஊக்குனர்களுக்கு மற்றும் பணியாளர்களுக்கு ஊக்கப்பரிசு, உதவித்தொகை, சீருடை வழங்கியது. | ₹ 3.61 கோடி | ₹ 72 இலட்சம் | ₹ 4.33 கோடி |
| **மொத்தம்** | **₹ 53.22 கோடி** | **₹ 8.87 கோடி** | **₹ 62.09 கோடி** |

# ஐ.வி.டி.பி. தன்னார்வ தொண்டு நிறுவனம்

ஐ.வி.டி.பி. இல்லம்,
9இ, சாந்தி நகர் 3வது கிராஸ்,
கிருஷ்ணகிரி-635 001,

04343-232 129, 236 420
francis@ivdpkrishnagiri.org
www.ivdpkrishnagiri.org

40 IVDP 1979 2019